மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2022ம் வருடம் மார்ச் மாதம் 02ம் நாள்
ஸ்ரீபிலவ ஆண்டு மாசி மாதம் 18ம் நாள் புதன்கிழமை
**CNR No. TNMD19000127-2018**
**IA . No. 937/2021**
**in**
**O.S. No.106/2018**

R. சந்திரா

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. துளசிதாஸ்
2. மாயாண்டி

.... 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி

இம்மனு 23.09.2021ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M. தியாகராஜன் மற்றும் திரு.M. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G. மூவேந்திரன் அவர்கள் ஆஜராகியும், 2ம்எதிர்மனுதாரர்/2ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. கௌஸ்கான் அவர்கள் ஆஜராகியும், கடந்த 22.02.2022ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள IA.No. 298/2019 மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 21.08.2018ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் ADJ 3/2018 பொது அதிகார பத்திரத்தின் செல்லும் தன்மை குறித்து நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க சோழவந்தான் சார்பதிவாளர் அவர்களை உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியமளிக்க உத்தரவிட அனுமதி வேண்டி

மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 13 விதி 4 மற்றும் பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதார் தரப்பு மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி குடியிருந்து வரும் வீட்டினை சட்டப்பூர்வமான வழிகளை தவிர வேறு வழிகளில் காலி செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இடைக்கால மனுவின் மூலம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியிடமிருந்து மனுதாரர்/வாதி கடந்த 16.09.2007ம் தேதி முதல் நாளது தேதி வரை தாவா சொத்தினை ஒத்திக்கு பெற்று குடியிருந்து வரும் நிலையில், தாவா சொத்தினை 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக கூறி காலி செய்யுமாறு பிரச்சனை செய்ததால், கடந்த 29.08.2018ம் தேதி காடுபட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததின் அடிப்படையில் விசாரணை செய்ததில் மேற்படி பிரச்சனையானது சிவில் தொடர்புடையது என்பதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தியதன் பேரில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், மனுதாரர்/வாதி குடியிருந்து வரும் வீட்டினை 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் மனைவியான சாந்திக்கு கடந்த 30.07.2018ம் தேதியில் பொது அதிகாரம் எழுதிக்கொடுத்து 21.08.2018ம் தேதியில் பதிவு எண் ADJ 3/18 என்ற எண்ணிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் கடந்த 24.09.2018ம் தேதியில் 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை கிரைய பத்திர பதிவு எண். 2381/2018ன்படி கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், எனவே அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியின் மனைவியாகிய சாந்தி என்பவரை தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி இடைக்கால மனு எண். 298/2019ன்படி மனு தாக்கல் செய்து மேற்படி மனுவும் கடந்த 13.03.2020ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், உண்மையில் ADJ 3/2018 ன்படியான பொது அதிகார ஆவணமானது சட்டப்படி பதிவு செய்யப்பட்டது அல்ல. மேற்படி பொதுஅதிகார ஆவணமானது இலங்கையில் நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் முன்னிலையில் எழுதப்பட்டு அதனடிப்படையில் 24.09.2018ம் தேதியில் சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே நோட்டரிக் பப்ளிக் வழக்கறிஞர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் பொது அதிகார ஆவணத்திற்கு முறையான அங்கீகாரம் உள்ளதா மேற்படி பொது அதிகார ஆவணத்தை மூல ஆவணமாக கொண்டு இந்தியாவில், தமிழ்நாட்டில் பத்திரபதிவுகள் சட்டத்தின்படி பத்திரம் பதிவு செய்ய சட்டமுகாந்திரம் உள்ளதா என்பதை நீதிமன்றத்திற்கு நிரூபணம் செய்வதற்கு, மேற்படி பொது அதிகார ஆவணத்தை மூல ஆவணமாக கொண்டு சோழவந்தான் சார்பதிவாளர்

அலுவலகத்தில் கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி சார்பதிவாளர் அவர்களை நீதிமன்றத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் ஆஜராகி சாட்சியம் அளித்தால் மட்டுமே மேற்படி பொது அதிகார ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்க ஆவணமா என்பதை நிரூபிக்கமுடியும் என்றும், மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**2) 2ம்எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

2ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும், மனுவில் கண்ட சங்கதிகள் தவறானது என்றும், அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் உட்கருத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/வாதியால், பிரதிவாதிகளைக்கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது மட்டுமே உண்மை என்றும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்கால மனு எண். IA. 403/2018 மனுவில் கடந்த 03.09.2018ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், "தாவா சொத்து 03.09.2018ல் யாரிடம் என்ன நிலையில் இருக்கின்றதோ அதையையே அடுத்த வாய்தா தேதி வரை தரப்பினர்கள் தொடர்ந்திருக்க செய்யவேண்டும் என்றும், மனுதாரர் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 3(a) வகைமுறைகளை பின்பற்றி அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்" என்றே உள்ளது என்றும், 2ம் பிரதிவாதியின் மனைவி சாந்தி என்பவர் பெயரில் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரிகள் 30.07.2018ம் தேதி பதிவு எண். ADJ 3/18ன்படி பொது அதிகார பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்பது மட்டுமே உண்மை என்றும், உரிமையியல் சட்ட விதிமுறைகளுக்கு முரணாக சோழவந்தான் சார்பதிவாளர் அவர்களை உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியமளிக்க கோரிய பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்/வாதி தாவா சொத்தைப் பொறுத்து ஒரு பதிவு செய்யப்படாத ஒத்தி ஆவணத்தை வைத்துக்கொண்டு காலவரையறை முடிந்த பிறகும் ஒத்தி பணத்தைப் பெற்றுக்கொள்ளாமல் தாவா சொத்தினை ஆக்கிரமிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், உண்மையில் தாவா சொத்தானது 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் தாய்வழிபாட்டிக்கு பாத்தியப்பட்டு, அவரது இறப்பிற்கு பின்னர் அவரது மகள் மற்றும் வாரிசுகளாகிய 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு, தாவா சொத்தை கூட்டாக ஆண்டு அனுபவம் செய்து வந்த நிலையில், கோவிந்தம்மாள் மற்றும் கீஸ்வரி இலங்கை கொழும்புவில் இருந்த நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மனுதாரர்/வாதிக்கு கடந்த 16.09.2007ம் தேதியில் மூன்று வருட காலக்கட்டத்திற்கு பதிவு செய்யப்படாத ஒத்தி பத்திரம் எழுதிக்கொடுத்த பின்னர் 1ம் பிரதிவாதியும் இலங்கையில் குடியேறிவிட்டதால், அதனை சாதகமாக பயன்படுத்தி, தாவா சொத்தினை அபகரிக்க வேண்டுமென்ற உட்கருத்துடன் மனுதாரர்/வாதி ஒத்திக்காலம்

முடிந்தபின்பும் தாவா சொத்தினை காலி செய்யாமல் மோசடியான ஆவணங்களை மனுதாரர்/வாதி உருவாக்கியுள்ளார் என்றும், 1ம் எதிர்மனுதாரரும் அவரது தாயாரும் சகோதரியும் இலங்கையில் குடியேறிவிட்டதால், தாவா சொத்தினை பராமரிக்க இயலாததால், அதனை கிரையம் செய்து கொடுக்க முடிவு செய்து, மனுதாரர்/வாதியை தாவா சொத்தினை காலி செய்யுமாறு 1ம் பிரதிவாதி கூறியபோது, மனுதாரர்/வாதி அதற்கு சம்மதித்ததால், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் அவரது தாயார் மற்றும் சகோதரியால் இந்திய பதிவு சட்டம் 1908 பிரிவு 32 மற்றும் 33ன்படி கடந்த 30.07.2018ம் தேதியில் இலங்கையில் உள்ள திரு. R. ரவீந்திரன் ("Attorney at Law Notary public and commissioner of oths Colombo Srilanka" அவர்களால் ஒரு பவர் பத்திரம் செய்து, அதில் திரு.R. ரவீந்திரன் அவர்களால் அத்தாட்சி செய்யப்பட்டு, மேற்படி பொது அதிகார பத்திரம் முறைப்படி கடந்த 21.08.2018ம் தேதியில் சோழவந்தான் சார்பதிவு அலுவலகத்தால் பொது அதிகார ஆவணம் ADJ 3/2018 என்ற எண்ணில் Adjudicate செய்யப்பட்டு முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் மனைவியும், பொது அதிகார முகவரான சாந்தி என்பவரும் தாவா சொத்தினை அளக்க சென்ற போது மனுதாரர்/வாதி தாவா சொத்திற்குள் நுழைய விடாமல் பிரச்சனை செய்ததால் மனுதாரர்/வாதிக்கு எதிராக 2ம் பிரதிவாதி காடுபட்டி காவல்நிலையத்தில் புகார் செய்து புகார் மனு ரசீது எண். 219/2018ன்படி வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னர் தாவா சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு, பொது அதிகார முகவரான சாந்தி என்பவரால் கடந்த 24.09.2018ம் தேதியில் கிரைய ஆவண எண். 2381/2018ன்படி சட்டப்படியாக கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ள நிலையில், அசல் வழக்கு நடவடிக்கையினை திசை திருப்ப வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பொருண்மையாகும்.

**<u>தீர்வு:</u>**

**4)** இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டதில், இந்த நிர் மனுவும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள IA.No.298/2019 மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 21.08.2018ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் ADJ 3/2018 பொது அதிகார பத்திரத்தின் செல்லும் தன்மை குறித்து நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க சோழவந்தான் சார்பதிவாளர் அவர்களை உரிய

ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியமளிக்க உத்தரவிட அனுமதி வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கும் வாதி தரப்பு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்ட 30.07.2018ம் தேதியிட்ட பொது அதிகார பத்திரம் 21.08.2018ம் தேதியில் சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதின் அடிப்படையில், அதில் குறிப்பிடப்பட்ட பொது அதிகார முகவரான M. சாந்தி என்பவரை 1ம் பிரதிவாதியின் சார்பாக வழக்கு நடவடிக்கையை மேல் நடத்துவதற்கு அனுமதி கோரி ஏற்கனவே இடைக்கால மனு எண். I.A.No. 298/2019 மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் இந்த நிர் மனுதாரர்/வாதி தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு இருதரப்பு விசாரணைக்கு பின்னீடு கடந்த 09.01.2020ம் தேதியில் மேற்படி பொது அதிகார பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது என்ற அடிப்படையில் மேற்படி மனுவும் நிபந்தனையின் பேரில் அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் பின்னீடு மனு அனுமதி நிபந்தனையின்படி 1ம் பிரதிவாதி பொது அதிகார முகவர் சாந்தி என்பவரை அங்கீகரித்து அவர் மூலம் வழக்கை மேல்நடத்த தனியாக மனு தாக்கல் செய்யாததால் அம்மனுவும் 13.03.2020ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

5) மேலும் பொது அதிகார பத்திரம் கடந்த 30.07.2018ம் தேதி எழுதப்பட்டு நோட்டரி பப்ளிக் அவர்களால் சான்றொப்பமிடப்பட்டு, மேற்படி ஆவணமும் 21.08.2018ம் தேதியில் சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண். ADJ 3/2018ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் அதனடிப்படையில் 2ம் பிரதிவாதி மாயாண்டி என்பவருக்கு 24.09.2018ம் தேதியில் மேற்படி பொது அதிகார பத்திரம் அடிப்படையில் 1ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் பொது அதிகார முகவர் சாந்தி என்பவர் 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை கிரையம் செய்து கொடுத்து கிரையம் ஆவண எண் 2381/18ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் மேற்படி 2 ஆவணங்களும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களாக இருக்கின்ற நிலையில், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 74ன்படி பொது ஆவணங்கள் என்ற நிலையில், அதில் கண்ட சரத்து உண்மையானதாக அனுமானிக்கலாம் என்ற நிலைப்பாடு இருக்கிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6) மேலும் மேற்படி பொது அதிகார பத்திரம் நோட்டரி பப்ளிக் /அட்வகேட் முன்னிலையில் சான்றொப்பம் இடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், முறையாக பதிவு செய்யப்பட்டதாகவே கருதப்படும் என இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 85ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Sec. 85 Presumption an to powers – of attorney** – The Court shall presume that every document purporting to be a power of attorney, and to have been executed before an authenticated by a Notary Public, or any court, judge, Magistrate, (Indian) consul or Vice-Consul,

or representative[***] of the [Central Government], was to executed and authenticated.

மேலும் இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் பின்வருமாறு முன்தீர்ப்பு பகரப்பட்டுள்ளது.

**2014(3) MWN(Civil) 711 (Mad) R. Vatshala (vs) R. Krishnakumar case**

**Sec. 85** - Presumption as a power of attorney – As rightly pointed out by the counsel for the defendant sec. 85 – deals with presumption as to the power of attorney and the court shall presume that every document purporting to be a power of attorney and to have been executed before and authenticated by a Notary public was so executed and authenticated.

எனவே வழக்கின் மேற்கண்ட பொருண்மை மற்றும் சட்ட நிலைப்பாடுகளின்படி மேற்படி பொது அதிகார பத்திரத்தின் உண்மைதன்மை மற்றும் செல்லும்தன்மையை ஆராய மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) மேலும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 77ன்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பின் அதன் உண்மைத்தன்மை மற்றும் உள்ளடக்கம் குறித்து நிரூபணம் செய்யப்பட வேண்டியதில்லை என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். மேற்படி சட்டப்பிரிவு 77லும் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **77. Proof of documents by production of certified copies.**
> Such certified copies may be produced in proof of the contents of the public documents or parts of the public documents of which they purport to be copies.

மேற்படி பொருண்மை தொடர்பாக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**2017(1) TNMAC 518(AIR) New India Alliance C o Ltd (vs) Amzad khan.**

**Sec.77-Indian Evidence Act.** The document is a public document and the contents of the same were not required to be proved in view of section 77 of the evidence act.

மேலும் மேற்படி பொது அதிகார பத்திரம் மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்த கிரையப்பத்திரம் இம்மனு விசாரணையில் வா.சா.ஆ.1 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இரு ஆவணங்களும் அலுவல் முறையில் சோழவந்தான் சார்பதிவாளரால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(g)ன்படி " நீதிமுறை மற்றும் அலுவல் முறை செயல்பாடுகள்" முறைப்படி நடந்துள்ளதாக அனுமானிக்கலாம் என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். மேற்படி சட்டப்பிரிவு

என தீர்வு காணப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(e)ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**114. Court may presume existent of certain facts.**- The Court may presume the existence of any fact which it thinks likely to have happened, regard being had to the common course of natural events, human conduct and public and private business in their relation to the facts of the particular case.

(e) that judicial and official acts have been regularly performed;

இது தொடர்பாக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்டவாறு முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**Lalitha Mohan (v) Pratap K. Moturi, 2020(2) CTC 129(Mad) (DB): 2020(2) MLJ 430 (Mad): 2020(2) MWN (Civil) 472 (Mad)**

***Section 114(e) – Scope – Section 114(e) of the Evidence Act, 1872*** *read with Section 60 of the Registration Act do create a presumption. Such a presumption is attributable to the official act of the registration.* _எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்/வாதி தரப்பு வாதம் சட்டப்படியோ பொருண்மைப்படியோ ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் பொது அதிகாரப்பத்திரம் தொடர்பான தரப்பினர்கள் அதனை ஆட்சேபணை செய்யாத நிலையில் மனுதாரர்/வாதி அதனை ஆட்சேபணை செய்ய சட்டப்படி எவ்வித உரிமையுமில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 13 விதி 4ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சட்டப்பிரிவு வழக்கு விசாரணையில் சான்றாவணமாக குறியீடு செய்யப்படும் ஆவணங்கள் மீது மேற்குறிப்பு செய்வது தொடர்பானது ஆகும். எனவே மனுப்பரிகாரத்திற்கும் மேற்படி சட்டப்பரிகாரத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இருந்த போதிலும் தவறான சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டதால் நிவாரணத்தை நிராகரிக்க இயலாது என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். அதுவும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் Pankajbhai Rameshbhai Zalavadia v. Jethabhai Kalabhai Zalavadiya(Dead) through LRs and others வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு 2017 (3)T.N.C.J. 793 (SC) என்ற சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**Judicial discretion** - A mere wrong mention of the provision in the application would not prohibit a party for the litigation from getting justice – Courts are meant to do justice and not do decide the applications based on technicalities.

(8) மேலும் மேற்படி இடைக்கால மனு IA.No. 298/19 மனு விசாரணை நிலுவையில் இருந்தபோதே மனுதாரர்/வாதி தரப்பில் இந்த நிர் மனு பரிகாரம் தொடர்பாக இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் ஏற்கனவே திருப்பப்பட்டுள்ளது. அதன் பின்னீடு மனுதாரர்/வாதியால் இந்த நிர் மனுவும் கடந்த 16.09.2021ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் இந்த நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்உரையில், ஏற்கனவே அசல் வழக்கில் இடைக்கால மனு எண்.IA.No. 403/2018ன்படி தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் தவறானது என்றும், மேலும் தாவா சொத்தானது ஆதியில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் தாய்வழி பாட்டியான வள்ளியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு, அதன் பின்னீடு அவரது மகளான கோவிந்தம்மாள் என்பவருக்கும், அதன் பின்னீடு அவரது சட்டப்பூர்வ வாரிசுகளான 1ம் பிரதிவாதி துளசி தாஸ் மற்றும் மகளான கீஸ்வரி ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டு இருந்ததாகவும், கோவிந்தம்மாள் மற்றும் கீஸ்வரி இலங்கை கொழும்புவில் இருந்த நிலையில், 1ம் பிரதிவாதி வாதிக்கு தான்தோன்றித்தனமாக கடந்த 16.09.2007ம் தேதியில் மூன்று வருட கால வாய்தாவிற்கு தாவா சொத்தினை பதிவு செய்யப்படாத ஒத்தி பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி ஒத்தி காலம் முடிந்த பின்னீடும் வாதியானவர் தாவா சொத்தினை ஒப்படைக்காமல் இந்த நிர் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் அதன் தொடர்ச்சியாக 1ம் பிரதிவாதியும் கோவிந்தம்மாள் மற்றும் கீஸ்வரி ஆகியோர்களுடன் நிரந்தரமாக இலங்கையில் குடியேறி விட்டதால், தாவா சொத்து தொடர்பாக ஏற்கனவே 30.07.2018ம் தேதியில் 2ம் பிரதிவாதியின் மனைவியான M.சாந்தி என்பவருக்கு நோட்டரி பப்ளிக் முன்னிலையில், பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தும், அதுவும் சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் அவரது கணவரான 2ம் பிரதிவாதிக்கு 24.09.2018ம் தேதியில் கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும் இந்திய பதிவுச்சட்டம் 1908 சட்டப்பிரிவு 32,33ன்படி மேற்படி பொது அதிகார பத்திரம் மேற்படி நோட்டரி வழக்கறிஞரால் அத்தாட்சி செய்யப்பட்டு, தொடர்ந்து பொது அதிகார ஆவணம் ADJ 03/2018ன்படி Adjudicate செய்யப்பட்டுள்ளதில் அதன் செல்லும் தன்மை குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ள I.A.No. 403/2018ன்படியான தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் தாவா சொத்தின் உரிமை மற்றும் அனுபவப்பாத்தியம் தொடர்பான எதிர்வாதத்திற்கும் இம்மனு பரிகாரத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனை அசல் வழக்கு விசாரணையில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்வு காண இயலும்.

9) அதேபோல் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இந்திய பதிவு சட்டம் 1908 சட்டப்பிரிவு 32 மற்றும் 33 என்பது ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு மேற்படி ஆவணங்களை எவர் அல்லது யார் மூலம் தாக்கல் செய்வது தொடர்பான நடைமுறையாகும். ஆனால் இம்மனு பரிகாரமாக 30.07.2018ம் தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பொது அதிகார பத்திரம் மற்றும் அது 21.08.2018ம் தேதியில் சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது குறித்து செல்லும் தன்மை (Validity) குறித்து உறுதிப்படுத்துவதற்காக சார்பதிவாளரை விசாரணை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும். எனவே சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு ஆவணங்கள் முன்னிலைப்படுத்தி தாக்கல் செய்வதற்கான நடைமுறைக்கும், இம்மனு பரிகாரமான பொது அதிகாரப்பத்திரத்தின் செல்லுந்தன்மை தொடர்பான பொருண்மைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பொது அதிகார பத்திரம் சட்டப்படி செல்லும் தன்மையுடையதா? இல்லையா என்பது தொடர்பாக பரிசீலனை போது அது தொடர்பாக ஏற்கனவே இடைக்கால மனு எண். IA.No. 298/2019 மனு உத்திரவில் மேற்படி பொது அதிகார ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றே தீர்வு காணப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவினை ஆட்சேபணை செய்து மனுதாரர்/வாதி தரப்பில் எவ்வித மேல்முறையீடோ சீராய்வு மனுவோ தாக்கல் செய்யப்பட்டதற்கு எவ்வித விபரங்களும் இம்மனுவில் குறிப்பிடப்படவில்லை. மேலும் மேற்படி பொது அதிகாரப்பத்திரமும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரமான வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று மனுதாரர்/வாதி தரப்பில் தனிப்பட்ட முறையில் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யப்பட்டதாகவோ (To declare that deeds are null and void) அல்லது இந்த நிர் அசல் வழக்கில் அது சம்பந்தமாக கூடுதல் பரிகாரமும் எதுவும் கோரப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. மேலும் இந்த நிர் மனு அசல் வழக்கும் விசாரணை துவங்கப்படாமல் ஆரம்ப நிலையிலே உள்ளது. எனவே மேற்படி பொது அதிகார பத்திரத்தின் உண்மைதன்மை மற்றும் செல்லும்தன்மை குறித்து ஆட்சேபணை இருக்கும் பட்சத்தில் அதனை அசல் வழக்கு விசாரணையில், வாதி தரப்பு விசாரணையில் அல்லது வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்தில் மட்டுமே அது தொடர்பான மனுக்கள் மற்றும் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தி அது தொடர்பான நபர்களை விசாரணை செய்தும் வாதம் செய்வதற்கு சட்ட வழிமுறைகள் உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) மேலும் அசல் வழக்கில் ஆரம்ப விசாரணை (Pretrial) துவங்கப்படாத நிலையில் இம்மனு பரிகாரம் சட்டப்படியும் பொருண்மைப்படியும் ஏற்கத்தக்கதல்ல. மேலும் பொது அதிகார பத்திரம் சட்டப்படி செல்லும்தன்மையுடையது என அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண் I.A.No. 298/2019ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், அதனை

ஆட்சேபணை செய்து எவ்வித மேல்முறையீடும், சீராய்வு மனுவும் மனுதாரர்/வாதி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலும், மேற்டி வழக்கு பொருண்மை மற்றும் சட்டநிலைப்பாட்டின்படியும் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| 1.ம.சா.ஆ.1 - | 30.07.2018ம் தேதியிட்ட பொது அதிகார பத்திரம் |
| 2. ம.சா.ஆ.2 - | 25.8.18ம் தேதியிட்ட காடுபட்டி காவல்நிலைய புகார் மனு |
| 3. ம.சா.ஆ. 3- | 24.09.2018ம் தேதியிட்ட கிரைய பத்திரம் |

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//